

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, கோபாலபுர இல்லத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு முன்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்களவைத் தேர்தல் அறிக்கை மற்றும் மக்களவைத் தேர்தல் கழக வேட்பாளர்கள் பட்டியல் ஆகியவற்றை வைத்து, வணங்கினார்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை, மெரினா கடற்கரையில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்களவைத் தேர்தல் அறிக்கை மற்றும் மக்களவைத் தேர்தல் கழக வேட்பாளர்கள் பட்டியல் ஆகியவற்றை வைத்து, வணங்கினார்.




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை, மெரினா கடற்கரையில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்களவைத் தேர்தல் அறிக்கை மற்றும் மக்களவைத் தேர்தல் கழக வேட்பாளர்கள் பட்டியல் ஆகியவற்றை வைத்து, வணங்கினார்.



கழக நாடாளுமன்ற வேட்பாளராக தம்மை அறிவித்தமைக்கு நன்றி தெரிவித்து, கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கழகப் பொருளாளர், திருப்பெரும்புதூர் தொகுதி கழக வேட்பாளர் டி.ஆர்.பாலு அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



கழகத் தலைவரும் – முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களை மத்திய சென்னை நாடாளுமன்ற தி.மு.க. வேட்பாளராக அறிவிக்கப்பட்ட தயாநிதி மாறன் எம்.பி. சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு உள்ளனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.3.2024) அவரது இல்லத்தில், மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஸ்ரீதர் வாண்டையார் அவர்கள் நிர்வாகிகளுடன் சந்தித்து, மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தார். உடன் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா உள்ளார்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் பொதுச் செயலாளர் திருப்பூர் அல்தாப் அவர்கள் நிர்வாகிகளுடன் சந்தித்து, திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையை பாராட்டி, மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தார். உடன் வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், முக்குலத்தோர் புலிப்படை தலைவரும், நடிகருமான கருணாஸ் அவர்கள் சந்தித்து, மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தார். உடன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.3.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், ஆதித்தமிழர் கட்சியின் தலைவர் கு.ஜக்கையன் அவர்கள் நிர்வாகிகளுடன் சந்தித்து, மக்களவைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி கட்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தார். உடன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.




முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (21.3.2024) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், "தேவேந்திரகுல மக்கள் முன்னேற்ற பேரவை"யின் தலைவர் எஸ்.ஆர்.பாண்டியன் மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாகவும், கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற தங்கள் பேரவை நிர்வாகிகள் பாடுபடுவார்கள் எனவும் உறுதி அளித்தனர்.



முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.3.2024) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், 'திராவிடத் தமிழர் கட்சி'யின் தலைமை நிலையச் செயலாளர் பேரறிவாளன் மற்றும் நிர்வாகிகள் நேரில் சந்தித்து, நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாகவும், கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற தங்கள் கட்சி நிர்வாகிகள் பாடுபடுவார்கள் எனவும் உறுதி அளித்தனர்.